[illegible] 06 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

[illegible] 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 14 (27.3.94) ஞாயிற்றுக்கிழமை ஓலை 87

## நோயாளரைப் பார்வையிட வருபவர் வெயிலில் வாடும் அவலம்

யாழ். குடாநாட்டின் நாலாபுறமும் இருந்து நோயாளரை பார்வையிட யாழ். போதன வைத்தியசாலைக்கு வருவோர் வெயிலில் வாடவேண்டியுள்ளது; பல்வேறு போக்குவரத்து காரணங்களினால் குறிப்பிட்ட நேரத்திற்கு தமது உறவினரை பார்வையிட வரமுடியாமையினால் சில மணி நேரத்திற்கு முன்னர் வருபவர்களை கொதிக்கும் வெயிலில் கட்டடத்திற்கு வெளியே நிறுத்தப்படுகின்றனர்; இதனால் சிலர் மயக்கம் அடைந்த சம்பவங்களும் இல்லாமல் இல்லை; ஆனால் நோயாளரை பார்வையிட வருவோர் தங்குவதற்காக றோட்டறி கழகத்தினால் கட்டப்பட்ட மண்டபம் யாழ்; போதனா வைத்தியசாலை தேவைக்காக எடுக்கப்பட்டு (5ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு சங்கடமாம்; கொடியை அகற்ற உத்தரவு

(காலி)

இரு பாடசாலைகளுக்கு இடையிலான 'பிக்மச்' சுக்குக் கட்டப்பட்டிருந்த பாடசாலைக் கொடிகளை அகற்றும்படி மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உத்தரவு பிறப்பித்த சம்பவம் காலியில் இடம் பெற்றுள்ளது. கிரிக்கட் விளையாட்டைப் பார்க்க மைதானத்துக்கு வரவிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு பாடசாலைக் கொடிகள் மனக் குழப்பத்தை ஏற்படுத்தும் என்றே கொடிகளை அகற்றும் படி பொலிஸ் அதிகாரி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் எட்டு பட்டாலியன்கள் வடபகுதிக்கு அனுப்பப்பட்டன

வடபகுதிக்கு சிறிலங்கா இராணுவத்தின் தேசிய பாதுகாப்புப் படையின் இருந்து எட்டு பட்டாலியன்கள் படைத்துறை தலைமையினால் அனுப்பப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புப் படையில் 14 பட்டாலியன்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஆறு பாட்டாலியன்கள் கிழக்கில் நிலைகொண்டுள்ளன. கிழக்குப் பகுதியில் இருந்து ஏற்கனவே 10,000 படையினர் வடபகுதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தனர் தற்போது தேசிய பாதுகாப்புப் படையின் எட்டு பட்டாலியன்களும்வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக அனுமதி

## 1992-ம்ஆண்டு வெட்டுபுள்ளி கொழும்பில் வெளியாகியது

(கொழும்பு)

1992 க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று கொழும்பில் வெளியாகின. இம்முறை 8,800 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படவுள்ளனர். இம்முறை பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடங்களுக்கான (6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்குப் பிரச்சினை

# பயங்கரவாதமல்ல இனப்பிரச்சினையே!

# இராணுவத்தீர்வு சாத்தியமாகமாட்டாது

## சிங்கள மக்கள் ஏற்றுள்ளதாக சந்திரிகா

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் பயங்கரவாதப் பிரச்சினை இல்லை. இனப்பிரச்சினையே உள்ளது என்பதை சிங்கள மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டிருப்பதே தென்மாகாணசபை தேர்தல் முடிவுகள் உணர்த்தியிருப்பதாக மேல் மாகாணசபை முதல்வர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார். மேலும் அவர், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஒரு அரசியற் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் ஒழிய யுத்தத்தை நிறுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.



## ஐ. தே. க விற்குள் உட்கட்சி பூசல் உச்சகட்டத்தை அடைந்துள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் பதினேழு ஆண்டு காலமாக தேர்தல் நடத்தியபோதும் சாதாரண ஓர் சூழ் நிலையில் தேர்தல் என்றும் நடைபெறவில்லை எனவே மக்கள் [illegible]

டமை மட்டுமே ஆனால் இம்முறை வாக்களிப்பு நிலையங்களை பாதுகாப்பதில் இருந்து வாக்கு சாவடிகள் எண்ணப்படும் நிலையத்திற்கு கொண்டு செல்லும்வரை பாதுகாப்பு பொதுமக்களி [illegible]

-விக்டர் ஐவன்

கொண்டு வரப்படும் என நம்ப முடியும் என தெரிவித்தார். இன்று அவர்களுக்கு இருக்கும் பிரச்சினை தமது கட்சி கொண்டு செலுத்த [illegible]

மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஒரு அரசியற் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் ஒழிய யுத்தத்தை நிறுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

தென் மாகாணசபை தேர்தல் முடிவுகள் தொடர்பாக அவரின் கருத்தை அறியும் பொருட்டு அவரின் வதிவிடத்திற்கு சென்ற பி. பி. ஸி சிங்கள சேவை செய்தியாளர் எல். மோ. பெனான்டோ விடமே சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார். பதினேழு ஆண்டுகளின் பின்னர் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கொடுத்துள்ள பிரதான தீர்ப்பு இது வென்று கொள்ள முடியும் எனவும், எமது கட்சியை பொறுத்த மட்டில், இது பதினேழு ஆண்டுகளில் நாம் அடைந்த பாரிய வெற்றியெனவும் தெரிவித்தார்.

இதற்கு முக்கிய காரணம் இம்முறை தேர்தலின் போது பொது மக்கள் வீதிகளில் வெளிப்படையாக இறங்கி தேர்தல் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு செயல்பட்டமையே ஆகும். வாக்களிப்பு நிலையங்களை பாதுகாப்பதற்கும், வாக்கு பெட்டிகளை வாக்களிப்பு நிலையத்தில் இருந்து வாக்கு எண்ணப்படும் இடம் வரை கொண்டு செல்லும் வரையும் மக்கள் பாதுகாப்பு கொடுத்தமை வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. மக்களின் செயல்பாட்டினால் அரசாங்கம் தான் முன்னர் செய்த தேர்தல் ஒழுங்கீனத்தை தொடர்ந்து செய்ய முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டது. இது எமது நாட்டின் எதிர்கால ஜனநாயகத்தை பாதுகாத்தமைக்கு ஒத்தசெயலாக கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்

ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாதார கொள்கையினால் விசேஷமாக கிராமிய மக்கள் மிகவும் பாதிப்பு அடைந்து காணப்படுகின்றவர், மற்றும் தெற்கில் சென்ற வருடங்களில் காணப்பட்ட அதிகார துஷ்பிரயோகம் மற்றும் காணாமல்போனவர்கள் பற்றி விவகாரங்களும் இத்தேர்தலில் அரசாங்கத்திற்கு புதிய பாடம் ஒன்றைக் கற்பித்ததாகவும் அவர் தெரிவித்தார்

(6ஆம் பக்கம் பார்க்க)



தேர்தல் என்றும் நடைபெறவில்லை எனவே மக்கள் தீர்மானித்து ஓர் ஊழல் அற்ற சாதாரண தேர்தலை நடத்த முன்வந்தோடு அதற்காக செயல்பட்டமையும் இத் தேர்தல் மூலம் காணக்கூடியதாக இருந்ததாக 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அதாவது சென்ற தேர்தல்களில் மக்கள் சென்று வாக்களிப்பில் கலந்து கொண்டு செல்லும்வரை பாதுகாப்பு பொதுமக்களினால் வழங்கப்பட்டது. இது சரித்திரத்திலே முதல் முறை நடைபெற்றது என கூறமுடியும் என தெரிவித்தார்.

இத் தேர்தல் முடிவுகளை தொடர்ந்து மக்கள் இந்த அரசாங்கத்தை ஓர் பலவீன அரசாங்கமாகவே கருதுகின்றனர். இந்த பலவீனம் ஐக்கிய தேசிய கட்சியுள்ளே உள்ள உட்பூசல் வெளியே இருக்கும் பிரச்சினை தமது கட்டி கொண்டு செலுத்தக் கூடிய ஓர் தலைமை இருப்பதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது இதேசமயம் ஜனாதிபதியை கட்சியில் பலர் குறை கூறுவதாகவும் இவரது நடவடிக்கையினாலே கட்சிக்கு இந்நிலை ஏற்பட்டதாக வெளிப்படையாக தெரிவிக்கின்றனர் தற்போது இந்தநிலை ஐக்கிய தேசியக்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தென்மாகாணசபைத் தேர்தல்

# எதிரணியினர் வெற்றியை கொண்டாட அரசாங்கம் முட்டுக்கட்டை

## ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பு

(கொழும்பு)

தென்மாகாண சபைத்தேர்தலில் கிடைத்த அமோக வெற்றியைக் கொண்டாட விடாது ஆளும் கட்சியினர் முட்டுக்கட்டை போட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

கடந்த 24 ஆம் திகதி தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றதும் அதில் பொதுஜன ஐக்கிய முன்னணி 32 ஆசனங்களைப் பெற்றதும் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 23 ஆசனங்களைப் பெற்றதும் தெரிந்ததே. தமக்கு கிடைத்த இப் பெரு வெற்றியை கொண்டாடும் முகமாக தென்மாகாணத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இவர்கள் இவ்வெற்றியைக் கொண்டாடுவதை நிறுத்தும் வகையில் அரசு தீவிரமாக செயல்பட்டுவருவதாகவும் இதன் ஒரு கட்டமாகவே தினமும் இரவு வேளைகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும்சுட்டிக் காட்டப்படுகிறது.

நேற்று காலை 5 மணிக்கு நீக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மீண்டும் நேற்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இது இன்று காலை 5 மணிக்கு நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவ நடவடிக்கை குறையலாமென தமிழ்க் குழுக்கள் கவலை

(மணிலா)

தென்மாகாண சபைத் தேர்தலில் ஐ. தே. க. தோல்வியுற்றதால் இனி விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்கள் குறைக்கப்படலாம் என கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் கவலை தெரிவித்துள்ளன என தென்மாகாண சபை முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது. வன்முறையினால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது என்பதை உணர்ந்து அரசு போரை நிறுத்தி பேச்சுக்கான சூழலை உருவாக்க வேண்டும் என இக் குழுக்கள் வலியுறுத்த வேண்டுமே தவிர தம்மால் இயலாததை தம்மால் முடியாததை அரசபடை ஆயுதரீதியாக விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள வலியுறுத்துவது தமிழரின் நலனில் அக்கறை அற்ற செய

(6ஆம் பக்கம் பார்க்க)

# பெண் கைது

(சம்மாந்துறை)

சம்மாந்துறையில் அனுமதிப்பத்திரம் இல்லாத துப்பாக்கி வைத்திருந்ததாக கே. எம். ஆயிஷா உம்மா என்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்த 12 குழல் துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

# 2 நாள் விசேட படகுச்சேவை

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் கிளாலி - பூநகரிக் கிடையிலான விசேட படகுச்சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# அகதிமுகாமின் அவல வாழ்வு போதும் என்றநிலையில் திரும்பினோம்

## யாழ். திரும்பிய அகதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''கடற்கரைப் பகுதியில் தங்கியிருந்தோம், கடற்றொழில் தெரிந்திருந்தது. ஆனால் கடலில் இறங்குவதற்கு எமக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் போதிய வருமானமின்றி நீண்ட நாட்கள் அகதிமுகாமில் அவல வாழ்வு வாழ்ந்தோம்'' இவ்வாறு இந்தியாவில் அகதிமுகாமில் தங்கியிருந்த குருநகரைச் சேர்ந்த திரு. அன்ரன் பொன்னப்பா (வயது 36) என்பவர் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து திரும்பிய இவர் கடந்த எட்டு மாதங்களாகவவுனியாவிலும் திருகோணமலையிலும் தங்கியிருந்து விட்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவர் தொடர்ந்து கூறும் போது, கடந்த நான்கு வருடங்களாக நாங்கள் அகதி முகாம்களில் தங்கி வாழ்ந்த அவல வாழ்வு போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம் இதனால் நாடு திரும்பத் தீர்மானித்தோம் என்றார்.

நேற்று யாழ்ப்பாணம் திரும்பியவர்களில் ஒருவரான வெ. செபியா (வயது 31) என்ற பெண் கூறும் போது இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்த காலத்தில் எமக்கு கிடைத்த நிவாரண உதவிகள் எமது வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை. குழந்தைகளுக்கு 19 ரூபாவும் பத்துவயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு 30 ரூபாவும், ஏனையோருக்கு 60ரூபாவும் மாதத்தில் இரு தடவைகள் மட்டும் வழங்கப்பட்டு வந்தது. இப் பணத்தைக் கொண்டு எமது வாழ்க்கைச் செலவைக் கவனிப்பது என்பது கடினமாக இருந்தது என்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும் போது. அகதி முகாம்களில் தங்கியிருந்த எமக்கு போதிய சுகாதார வசதிகள் செய்து தரப்படவில்லை. இதனால் குறிப்பாக சிறு குழந்தைகளுக்கு பல்வேறு தொற்று நோய்கள் பரவியது. இதனால் முகாமில் தங்கியிருந்த ஒரு சில குழந்தைகள் மரணமடைந்தன என்றும் தெரிவித்தார். (க)

### இந்தியாவில் இருந்து திரும்பிய

# 20 குடும்பங்கள் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்

(வடமராட்சி)

இந்தியாவுக்குச் சென்று திரும்பி வந்து வவுனியாவில் தங்கியிருந்தவர்களில் 20 குடும்பங்கள் கொண்ட அகதிகள் நேற்று நரோமா கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களை பருத்தித்துறை பரிவத வர்த்தனி கலாமண்டபத்தில் தங்க வைத்து அவர்களுக்கான உணவு விடுதலைப்புலிகளினால் வழங்கப்பட்டது. இம் மண்டபத்தில் அவர்களுக்கு வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. அதனையடுத்து அவர்கள் தத்தமது சொந்த இடங்களுக்குச் சென்றனர்.

நேற்று வந்தவர்களில் அனேகமானோர் யாழ் குருநகரைச்சேர்ந்தவர்கள் இங்கு இருப்பிடவசதிகள் உள்ளவர்களாவர். (யோ)

# வரி விளம்பரம்


**பெயரமைத்தல்: எண் ஜோதிட வெளியீடு**

எவருடைய உதவியுமின்றி நீங்களே அதிர்ஷ்டகரமாக பெயரமைப்பதற்கான எந்தக் காலத்திற்கும் உதவக்கூடிய சஞ்சிகை: ஒவ்வோர் எண்களுக்குமான பலன்கள் விளக்கங்களுடன் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன, பல வாசகர்களின் நன்றி கலந்த பாராட்டுக் கடிதங்களுக்கு நன்றி. ஸ்ரீ வாணி வெளியீடு — ரூ. 25/- (7846)

**புரோயிலர் குஞ்சு விற்பனை**

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7840)

**றெனி மூக்குக்கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடி உடன் வழங்கப்படும்; இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7844)

**ஆங்கில மருத்துவம்**

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பகவான் ஆங்கில மருத்துவ அகம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-8879)

**நவீன மருத்துவம்**

வாத வியாதி, ஆஸ்துமா, தோல் நோய்கள், மலட்டுத்தன்மை, மூலரோகம், நாள்பட்ட சாய்ச்சல், இருதய வியாதிகள், சிறுவர் பெரியவர்க்குரிய சகல நோய்களுக்கும் நவீன எலட்ரோனிக் பரிசோதனைகளும், சிகிச்சையும் இரெட்ணம் வைத்தியசாலை, 129 ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம். (7838)

**இலவச ஆலோசனை**

லண்டனில், A C M A., Transport, Marketing பட்டங்கள் பெற்றவர் இலவசமாக சேவை மனப்பான்மை அடிப்படையில் தமிழ் ஈழத்தில் மேல் வகுப்பு படிக்கும்


## மலேரியா தடுப்பு என்பது கூட்டு முயற்சி ஆகும்

(வடமராட்சி)

மலேரியா தடுப்பு வாரத்தையொட்டி ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கிடையில் கடந்த வியாழன் கல்லூரியில் நடைபெற்ற சுகாதாரத்தைப் பேணச்சம்பந்த மான போட்டியில் 9 'ஏ' வகுப்பு மாணவர்கள் முதலாம் இடத்தைப்பெற்றனர்.

இப்போட்டி பற்றி கல்லூரி அதிபர் திரு கே. நடராசா கருத்துத் தெரிவிக்கையில் கல்லூரி மட்டத்தில் இவ்விதமான போட்டிகள் நடாத்துவது சுற்றுப் புறச் சூழலைப் பேண உதவுவதுடன் மாணவர்கள் மத்தியில் மலேரியா தடுப்பு பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றார்.

அத்துடன் மலேரியா தடுப்பானது தனிமனித முயற்சியல்ல இது ஒரு கூட்டு முயற்சி என்ற எண்ணக்கருவை வளர்க்க உதவும் என்றார். (யோ)

## வழக்குச்செலவை கட்டும்படி குடியியல் வழக்கில் தீர்ப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை நீதிமன்றில் குடியியல் வழக்கு ஒன்று பருத்தித்துறை காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் எதிராளிக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவை பெற்ற மையை விசாரணையின் போது தவறு என்று நீதிமன்று கண்டு கொண்டதினால் குமாரசுவாமி வேலாயுதம் என்பவரை செலவாக 500ரூபா கட்டுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது.

புலோலி மேற்கைச் சேர்ந்த மேற்குறித்த நபர் எவ்வித உரிமையோ அதிகாரமோ, தத்துவமோ இல்லாமல் சோமசுந்தரம் சிவபாதம் என்பவரின் சொந்தமான காணிக்கு வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

தம்பசிட்டியைச் சேர்ந்த முருகேசு விசுவநாதன் என்பவருக்கு குமாரசுவாமி வேலாயுதம் 500 ரூபாவை வழக்குச் செலவாக செலுத்தியிருந்தார். (யோ)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாண மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மெய்வல்லுநர் சட்ட விதிகள் சம்பந்தமான கருத்தரங்குத் தொடரின் ஆரம்ப வைபவம் இன்று காலை ஒன்பது மணியளவில் டாக்டர் ரி. டபிள்யூ ஜெயகுலராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்ளவுள்ளார்.

ஃ ஃ

தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. இ. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக வலிவடக்குப் பிரதேச செயலாளர் திரு. நா. வேதநாயகனும், சிறப்புவிருந்தினராக திரு. நளின், செல்வி கு. எழிற்கொடி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

சாவகச்சேரி சத்திய சாயி சேவா நிலையத்தில் வட

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். பிரதேசச் செயலரவர் பிரிவுத் தேர்தல் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். புனிதசாள்ஸ் மகாவித்தியாலயத்தில் தலைவர் திரு. எம். எஸ். ஸ்ரனிலஸ் தலைமையில் நடைபெறும்.

இதேவேளை பருத்தித்துறைப் பிரிவின் ஆண்டுப்பொதுக்கூட்டம் இன்று காலை பத்துமணியளவில் வட இந்து மகளிர் கல்லூரியில் பேராசிரியர் திரு. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (24)

ஃ ஃ

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் 'ஈஸ்ரர் பரிசுத்தவார நிகழ்ச்சிகள் இன்றுமுதல் ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளன. (25)

ஃ ஃ

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமைக்காலை 9 மணிக்கு அலங்காரபீட பிரதிஷ்டை வைபவமும் நடைபெறவுள்ளது.


## பரதநாட்டிய அரங்கேற்றம்



செல்வி ஜனித்திரா சோமசூரியசிங்கம்

(உடுவில் மகளிர் கல்லூரி மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு நடன விரிவுரையாளர் திருமதி கிருஷ்சாந்தி இரவீந்திராவின் மாணவி

**இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர்**

**காலம்: 27-03-94 மாலை 3-45 மணி**

பிரதம விருந்தினர்: திரு. S. கனகரத்தினம் J.P., U.M. அரச சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்

திருமதி சரஸ்வதி கனகரத்தினம்

சிறப்பு விருந்தினர்: திரு. புதுவை இரத்தினதுரை பொறுப்பாளர் கலை பண்பாட்டுக் கழகம் தமிழீழ விடுதலைப் புலிகள்

திரு. கா. மாணிக்கவாசகர் அரச அதிபர், யாழ்ப்பாணம்

தயாரிப்பு: **நாட்டிய கலாகேந்திரா**

நட்டுவாங்கம்- திருமதி கிருஷ்சாந்தி இரவீந்திரா (விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)

பாட்டு- இன்னிசைவேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம் (தலைவர், இளங்கலைஞர்மன்றம்)

மிருதங்கம்- சங்கீத ரத்தினம் திரு. எஸ். மகேந்திரன் (உதவி விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)

வயலின்- செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜா (விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)


## நினைவு கூருகின்றோம்...

### 1994-03-27

1985-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

❋ **பாக்கியன்** (சோமநாதன் பாக்கியராசா-காரைதீவு, கல்முனை-அம்பாறை)

1986-ம் ஆண்டு பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கார்த்திக்** (கந்தையா ஜெயந்தன்-3-ம் வட்டாரம், முள்ளியவளை-முல்லைத்தீவு)

1988-ம் ஆண்டு பாலைக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் தீபன்** (கந்தையா தவராசா-சந்திவெளி-மட்டு)

**லெப் ரமணி** (.........)

கிளிநொச்சியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ஆனந்தன்** (நவரத்தினம் அன்பழகன்-புவனேஸ்வரி அம்பாள்வீதி, நல்லூர்கிழக்கு-யாழ்)

**உனேந்திரன்-மேரிதாஸ்** (சவரிப்பிள்ளை அன்ரன் கிறிஸ்ரிலோல்ட்-மாரிசன்கூடல்-இளவாலை)

1989-ம் ஆண்டு மடுவீதியில் பேருந்தில் பயணம் செய்கையில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

❋ **சில்வா** (அன்ரன் சதாகாயம் சில்வா-பெரிய நாவற்குளம்-மன்னார்)

❋ **அஜித்** (செளந்தரராஜா செல்வராஜா-வட்டிப் பித்தான்மடு-மன்னார்)

1991-ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையின் பின்னர் வீரச்சாவெய்திய,

**சுமன்** (இராமநாதன் சுகிவேஸ்வரன்-கெற்பலி-மிருசுவில்)

1992-ம் ஆண்டு 21-03-1992 அன்று வவுனியா-நொச்சிமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய,

**லெப். அகிலன்** (சிவசுப்பிரமணியம் சூரியகுமார்-பம்பைமடு-வவுனியா)

1993-ம் ஆண்டு மட்டு-அலியாவோடை காட்டுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தேவதாஸ்-தேவகுமார்** (வெற்றிவேல் சிறிதரன்-காரைதீவு-03, அம்பாறை)

**2-ம் லெப் பாப்பா** (தர்மலிங்கம் பிரசாத்-மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை)

**2-ம் லெப். தவக்குமார்** (தியாகராஜா நேமிநாதன்-பெரியநீலாவணை-மட்டு)

மட்டு-தம்பிலுவில் பகுதியிற் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கலாருபன்-கோயிட்ஸ்** (இளையதம்பி அற்புதராஜா-தம்பிலுவில்-அம்பாறை)

மணலாறு-கொக்குத்தொடுவாய் முகாம் அருகிலுள்ள சிறிலங்கா இராணுவக் காவலரண் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அருளப்பன்** (மொறிஸ் வின்சன் சிறிதரன்- 1-ம் குறுக்குத்தெரு-பருத்தித்துறை)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

தில் மேல் வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூற விரும்புகிறார். ச. கதிரமலைப்பிள்ளை, 15/3, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம். (7853)

---

## துரித சலவை

மாணவர் சீருடைகளின் துரித சலவைக்கு உடையின் பளிச்சிடும் வெண்மைக்கு மில்க்வைற் சவர்க்காரம். மில்க்வைற் சவர்க்காரப் பெட்டி 100க்கு ஒரு கவர்ச்சியான கைத்தறி லேஞ்சி அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. "மில்க்வைற்" (சி-8918)

---

## டாக்டர்கள் தேவை

M. B. B. S., R. M. P., A. M. P. டாக்டர்கள் யாழ். குடாவிற்குள்ளும், வெளியிலும் (வன்னிப் பிராந்தியம்) இயங்கும் பொது ஸ்தாபனத்தில் கடமையாற்றத் தேவை; 1-4-94ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகி, வில்லியம் ஹாவே இல. 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (7815)

---

## மேஜர் கணேசன் நினைவுச் சின்னம் அமைப்பு

தமிழீழத்தாயக மீட்பிற்காய் தன்னுயிர் ஈந்த மாவீரனும் முன்னாள் மூதூர் பிராந்திய தளபதியாகவுமிருந்த மேஜர் கணேசன் நினைவுச்சின்னம் திருநெல்வேலிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது. இச்சின்னமானது திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் ஆதரவுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப்பகுதியின் தேசநிர்மாணிகளினால் கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சேவா நிலையத்தில் வட பிராந்திய சக்தியசாயிசேவா நிலையங்களுடன் இணைந்து நடத்தும் வைத்திய பரிசோதனைகள் இன்று விடத்தல்பளை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

(தொல்புரம்)

சுழிபுரம் மேற்கு ஐயனார் ஆலய தொண்டர்சபையால் நடத்தப்பட்ட சைவசமய பொது அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா தொண்டர் சபைத்தலைவர் சி. சுபகரன் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 00 மணியளவில் நடைபெறவுள்ள மேற்படி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தம் அவர்கள் கலந்துகொள்வார். (41)

---

யாழ்.

பல்கலைக்கழகம்

## மகாபொலக் கொடுப்பனவு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான 3ஆம் தவணைப்பணம் 28-03-94 முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக்கிளையில் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கானநேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளன.

பதிவாளர்

(இ-8930)

---

வழும் நடைபெறவுள்ளது. இதில் பொன் ஸ்ரீவாமதேவன் அவர்களின் இன்னிசைக்கச்சேரியும் இடம்பெறும் (மு)

ஃ ஃ

(நல்லூர்)

யாழ் பல்கலைக்கழகத்துணைவேந்தராக கடமையாற்றி திறந்த பல்கலைக்கழகத்துக்கு சேவையாற்ற செல்ல உள்ள துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தால் இன்று பி. ப 3. 00மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சேவைநலம் பாராட்டு விழா ஒன்று நடைபெற உள்ளது (17) (25)

ஃ ஃ

(நல்லூர்)

கிறிஸ்தவர்களின் பரிசுத்த வார திருவழிபாட்டு நிகழ்ச்சியில் ஒரு கட்டமாக குருத்தோலை ஞாயிறு வழிபாடு இன்று இடம்பெற உள்ளது. மரியன்னை பேராலயத்தில் இன்று காலை 6.30 மணிக்கு குருத்தோலை மந்திரிக்கப்பட்டு பவனியாக யாழ் மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும். யாழ் ஆயர் பேரருள் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட உள்ளது (17)

ஃ ஃ

(சாவகச்சேரி)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை அதிபர் திரு. த. கந்தையா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதமவிருந்தினராக தென்மராட்சிக்கோட்டக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் கலந்துகொள்வார்கள்.

---

ஷாகிபாஜா- திரு. மு. கண்ணன் (இசையமைப்பாளர்)

## நிகழ்ச்சி நிரல்

3. 45- மங்கள இசை
5. 00- மங்கள விளக்கேற்றல்
அகவணக்கம்
பூஜை
குருவைக் கௌரவித்தல்
பக்கவாத்திய கலைஞரைக் கௌரவித்தல்
வரவேற்புரை
தலைமையுரை

## பரதநாட்டியம் ஆரம்பம்

1. புஸ்பாஞ்சலி- அலாரிப்பு
இராகம் — நாட்டை
தாளம் — மிஸ்ர சாபு
ஜதி அமைப்பு- திரு. S. மகேந்திரன்
விக்கினங்களைப் போக்கி வைபவம் சிறப்புற நிகழ வேண்டி புஷ்பங்களினால் இறைவனைப் பூஜித்து, புஷ்ப அஞ்சலி செய்து ஆரம்பமாகும் அலாரிப்பு கடவுள், குரு, சபை ஆகியோருக்கு வந்தனம் கூறுவதாக அமைந்துள்ளது.

2. ஜதிஸ்வரம்-
இராகம் — சாவேரி
தாளம் — ரூபகம்
இது ஸ்வரங்களையே தாதுவாகவும், மாதுவாகவும் கொண்டுள்ள நிருத்த வகையைச் சேர்ந்த உருப்படியாகும். முதலில் ஜதியுடன் ஆரம்பமாகி பின்பு ஸ்வரங்களாகப் பாடப்படும் பல்லவிக்கு வின்யாசங்கள் செய்வதாக இது அமையும்.

3. சப்தம்-
இராகம் — இராக மாலிகை
தாளம் — மிஸ்ரசாபு
இந்த உருப்படியில் முதல் முதலாக அபிநயம் அறிமுகப்படுத்தப்படுகிறது. சப்தத்தில் சொற்கட்டுகளும், கவிதைகளும் மாறிமாறி அமைக்கப்பட்டுள்ளது.

இசைவேளை

4. வர்ணம்
இராகம் - தன்யாசி
தாளம் - ஆதி
நிகழ்ச்சியில் இன்றியமையாத உருப்படியாகிய வர்ணம் நிருத்தமும் அபிநயமும் இணைந்ததாக அமைந்துள்ளது கடினமான ஜதிகளைக் கொண்டதாகவும் நர்த்தகியின் ஆற்றலை வெளிப்படுத்துவதாகவும் இது உள்ளது.

உரைவேளை

5. பதம் -
''பட்டுச்சிறகடித்து வானில்''
இயற்றியவர் - இயலிசை வாரிதி-

---

✻ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவர்கள்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(இ-8926)

---

பிரம்ம ஸ்ரீ வீரமணிஐயர்
இராகம் - ஆபோகி
தாளம் - ஆதி - (திஸ்ரகதி)
மங்கையொருத்தி வேலனிடம் அன்புகொண்டு தன் அன்பை பைங்கிளிகள் மூலம் தூதுவிடுவதை இது சித்தரிக்கின்றது.

6. கீர்த்தனம்-
''என்ன தவம் செய்தனை யசோதா''
இராகம் - காபி
தாளம் - ஆதி
கண்ணனுடைய குறும்புத்தனங்களையும் அற்புத லீலைகளையும் சித்தரிப்பதாக இது அமைந்துள்ளது.

7. கீர்த்தனம் -
''வண்ண வண்ணச் சேலைகட்டும் மீனாட்சி''
இயற்றியவர் - இயலிசை வாரிதி - பிரம்ம ஸ்ரீ வீரமணிஐயர்
இராகம் - திலங்
தாளம் - ஆதி (திஸ்ரகதி)
இது அம்பாளின் பெருமையையும், கருணையையும் போற்றி பக்தையானவள் மீனாட்சியின் நினைவாகவே பக்தி செலுத்துவதை இது சித்தரிக்கின்றது.

உரைவேளை

8. தில்லானா -
இராகம் - வரமு
தாளம் - ஆதி
ஜதி இயற்றியவர் - திரு. S. மகேந்திரன்
நடனக் கச்சேரியில் கடைசிப் பகுதியில் கையாளப்படும் தில்லானா, சொற்கட்டுக்களையே மையமாகக் கொண்ட நிருத்த வகையைச் சேர்ந்த உருப்படியாகும். இதில் பல்வேறு அசைவுகளும், உணர்ச்சிகளும் சப்த நயத்துடன் எடுத்துக்காட்டப்படுகின்றது.

9. மங்களம் -
இறைவன், குரு, பெற்றோர், சபையோர் எல்லோருக்கும் அஞ்சலி செலுத்தி மங்களமாக நிகழ்ச்சியைப் பூர்த்தி செய்தல்.


**அன்புடன் அழைக்கிறோம்**

**திரு. திருமதி P. S. சிங்கம்**

சிங்கம்ஸ் இல்லம் சிங்கம்ஸ் பார்மஸி
கோண்டாவில் மேற்கு (இ-8932) யாழ்ப்பாணம்

மானிப்பாய் கோ. ப. வர்த்தகர் சங்க வளர்ச்சி

## நிதியுதவிக் கலைநிகழ்ச்சிகள்



○ பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினமும் மாணவர்களும் இணைந்து வழங்கும் வீரதீரச்செயல்கள்

- நெருப்பு புதைகுழியில் சிலமணி நேரம் படுத்திருத்தல்
- இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக உடலில் ஏற்றுதல்
- அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
- ஓடும் வாகனத்தை தொண்டையால் இழுத்தல்
- 35Kg நிறையுடைய குண்டை 7 அடி உயரத்தில் இருந்து உடலில் ஏந்துதல்
- பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல்வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
- 3" 200 ஆணி அடிக்கப்பட்ட படுக்கைக்குமேலாகப் படுத்து மார்பின்மேலாக பாரமுடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்
- துரைரத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

○ தமிழீழ இசைக் குழுவினரின் தமிழீழ எழுச்சிக்கீதங்கள்

இடம்: மானிப்பாய் மாவீரர் கலையரங்கம்

காலம்: 27-03-94 ஞாயிறு மாலை 7.00 மணி

அன்பளிப்பு: 150/- 100/- 50/-

- நிர்வாகம்

விளம்பர அன்பளிப்பு:

மானிப்பாய் அரிசியாலை

மாவத்தை லேன், சுதுமலை. (சி-8898)


## புனர்வாழ்வு நிதி மோசடி அதிகாரி ஒருவர் கைது

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் பகுதியில் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு வழங்கப்பட்ட பணத்தை மோசடி செய்த உயர் அதிகாரியொருவர் கொழும்பில் இருந்து சென்ற சிறிலங்கா இரகசிய பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

செட்டிகுளம் பிரதேச செயலாளர் ஜே. வி. திருநாவுக்கரசு என்பவரே மேற்படி மோசடி தொடர்பாக 23-ம் திகதி கைது செய்யப்பட்டதாகவும் தொடர்ந்து இவர் மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டதாக தெரியவருகின்றது.


அண்ணா

திடீர் தோசை மா




ANNA INSTANT THOSAI FLOUR

சகல அண்ணா கோப்பிக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-8929)


## ஏல விற்பனையாளருக்கு மக்கள் பலத்த அடி

அரசியல் ஏல விற்பனையாளர்களுக்கு தென்பகுதி மக்கள் ஒன்றிணைந்து கொடுத்த பதிலடியேதென்மாகாணசபை தேர்தலில் ஆளும் கட்சிக்கு கிடைத்தபடுதோல்வியாகும் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சி. பி. குணரட்ண தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் நிமால் பிரான்சிஸ்கோ, அனுராபண்டாரநாயக்கா, காமினி திஸநாயக்கா றொனிடிமெல் ஆகியோர் ஏல விற்பனையில் பேரம்பேசியே அரசியலில் ஈடுபட்டனர் என்றார்.

### கிடைக்கவில்லை

கடந்த 5 மாதங்களாக யாழ் விலைமதிப்பு திணைக்களத்திற்கு சம்பளம் கிடைக்கவில்லை. கப்பலில் பதிவுத்தபால்கள் ஏதும் கொழும்பில் இருந்து கிடைக்கவில்லை. முன்பு அரச அதிபரிடமிருந்து முற்பணம்கிடைத்து வந்தது. தற்போது இது நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இவ்வூழியர்கள் மிக கஷ்டப்படுகிறார்கள்.

## தேர்தல் தோல்வி குறித்து பரிசீலனை செய்யப்படும்

எம்.எஸ் அமரசிறி

(கொழும்பு)

தென்மாகாண சபை தேர்தலில் கிடைத்த படு தோல்வி குறித்து பரிசிலனை செய்யப் போவதாக ஆளும்கட்சி சார்பில் போட்டியிட்ட எம்.எஸ். அமரசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் நடந்து முடிந்துவிட்ட தென்மாகாண சபைத் தேர்தலில் தனக்கும் தனது கட்சிக்கும் கிடைத்தபடுதோல்விகுறித்து தான் ஆராய இருப்பதாகவும் எதிர்வரும் தேர்தல்களில் எமது கட்சிக்கு ஏற்படவுள்ள தோல்விகளை இதன் மூலம் தவிர்க்கக்கூடியதாக இருக்கும் என தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

## அநுரா, காமினியால் ஐ.தே.கவிற்கு ஏமாற்றம்

(கொழும்பு)

அநுரா, காமினி திஸநாயக்கா ஆகியோரை கட்சியில் இணைப்பதன் மூலம் பெரும் இலாபம் அடையலாம் என்ற ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்பார்ப்பு தென்மாகாண தேர்தல் மூலம் முறியடிக்கப்பட்டுவிட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த தென் மாகாண சபைக்கான தேர்தலில் ஆளும் கட்சியான ஐ.தே.கட்சிக்கு கிடைத்த படுதோல்வியானது தெளிவாக இதனை எடுத்துக் காட்டியுள்ளது.

மேலும் வன்முறை, தேர்தல் ஒழுங்கீனம் போன்றவற்றிற்கு இடம் கொடுக்காது மக்கள் முன்னின்று செயற்பட்டமையே தென்பகுதி மக்களுக்குக் கிடைத்த பெரியதொரு வெற்றியாகும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

# மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு

எதிர்வரும் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு

# எழினி புடவை வாணியம்

## வழங்கும் மலிவு விற்பனை

## 28-03-94 முதல் 31-03-94 வரை

(திங்கள்) (வியாழன்)

## சேரன் பணிமனை - மருத்துவமனை வீதி
## யாழ்ப்பாணம்

**மலிவு விற்பனை**

பிரதான வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள
எமது நிறுவனத்தில் 03-04-94—04-04-94 வரை

★ வியாபாரிகளின் தேவைகருதி விசேட கழிவுடன்
★ தையல் நிலையத்தினருக்கு ஏற்ற துணிவகைகள்
★ சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும் ஏற்ற எல்லாவகை உடைகளும்

உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்

(ஜ-8915)

உ
ஓம் சக்தி துணை

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்:

நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனி மாதம் 14-ம் நாள் (27 - 03 - 94) ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணி முதல் நண்பகல் 12-00 மணிவரையுள்ள சுப வேளையில்.

எங்கள் சிரேஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**ஸ்ரீஸ்கந்தராசா**
(யாழ்பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயம், திருநெல்வேலி)
அவர்களுக்கும்

எங்கள் கனிஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**தங்கராணி (பாப்பா)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு கைதடி கயிற்றசிட்டிகந்தசுவாமி தேவஸ்தானத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமிகு ச. சந்தன் (காத்தி)
திருமதி சிதேவி (அம்மா)
கைதடிச் சந்தி
கைதடி.

அன்பளிப்பு:
சபாரத்தினம் - இந்திராஜா (சுவிஸ்)
இந்திராஜா - விஜயகுமாரி
மகன் - ரிஷா
கைதடி மத்தி வளர்மதி வீதி,
கைதடி.

(7837)



யாழோசை
yalosai

யாழோசை மன்ற மாணவர்

## அறிமுக விழாவும், நிதியுதவி நிகழ்வும்

விடியலைத்தேடும் பறவைகள்
இசையமைப்பாளர்
யாழோசை கண்ணனின்
இசைநெறியில்

அனைவரினதும் பாராட்டைப் பெற்ற

## செந்தமிழ் பாட்டு - II

(நவீன இசைகொண்ட பல்சுவைப் பாடல் நிகழ்வு)

இவ் இன்னிசை மாரியை, இசைத்தேர்வுபெற்ற பல பாடகர்கள், பாடகிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

காலம்:- ஏப்பிரல் 23 மாலை 3.00 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
ஏப்பிரல் 24 மாலை 3.00 கைலாசபதி கலையரங்கம்

விளம்பர அன்பளிப்பு:
சீமாட்டி புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-8928)


# விளையாட்டு போட்டி மூலம் உறுதிப்பாடு கிடைக்கின்றது

### -பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(தொல்புரம்)

ஒருமைப்பாடும், உறுதிப்பாடும்மெய்வல்லுநர் போட்டிகள் ஊடாக எமக்கு கிடைக்கின்றன; இந்தக் கல்லூரி மாணவ மாணவியர் இடம்பெயர்ந்த நிலையிலும் இவ்விழாவை சிறப்புற நடாத்தியுள்ளமை பாராட்டத்தக்க தொன்றாகும்.

இவ்வாறு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் கல்லூரி அதிபர் திரு. ந. பரமசிவம் தலைமையில் வட்டுக்கோட்டையில் நடைபெற்றபோது ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. நா. சுந்தரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், வட்டுக்கோட்டை மக்களும், காரைநகர் மக்களும் ஒன்றுசேர்ந்து எடுக்கும் விழா இதுவாகும். இடம்பெயர்ந்த நிலையில் எங்கெங்கோ எல்லாம் நாம் வாழும் நிலையிலும் இந்த விழாவிலே மக்கள் ஒன்று சேரும்போது எமது ஊரின் ஞாபகம்தான் மனதில் தோன்றுகிறது இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கி, உதவிகள் வழங்கிய நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் இந்நிகழ்வின்போது திவக வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. செம்மணன், சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு ந. மதி, வாரிவளவு நல்லியக்கசபை செயலர் திரு. பத்மநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (41)

## சுயதொழில் முயற்சிக்கு கடன்வசதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையினால் அரியாலை மணியரசன் குடியிருப்பில் வசிக்கும் 27 குடும்பங்களுக்கு சுயதொழில் வேலை வாய்ப்பிற்கென கடன் வசதி அளிக்கப்படவுள்ளது. தலா பத்தாயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ள இக்கடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தீவகக் கோட்டத்தின் ஊடாக விரைவில் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு கிடைக்கவுள்ளதாக குடியிருப்பு நிர்வாகத்தினரின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (22)

## பஸ் கட்டணம் குறைப்பு

யாழ். புலோப்பளை பஸ் சேவைக்கான பயணக் கட்டணம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நூற்றி ஐம்பது ரூபாவிலிருந்து நூறு ரூபாவாகக் குறைக்கப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணையம் தெரிவித்துள்ளது. மேலும் யாழ்-புலோப்பளை சேவையின் முதலாவது பஸ்சேவை நடைபெறும் நாட்களில் காலை எட்டு மணிக்கு புறப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## படையினர் முகாம்

மட்டக்களப்பில் பொதுமக்களின் 486 வீடுகளில் சிறிலங்கா அரசபடையினர் முகாமிட்டு தங்கியுள்ளனர். இதில் 355 வீடுகளில் இராணுவத்தினரும் 110 வீடுகளில் பொலிசாரும் 21 வீடுகளில் விசேட அதிரடிப்படையினரும் தங்கியுள்ளனர். இவ்வீடுகளின் உரிமையாளர்கள் பலர் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் பலி

தேசிய வீடமைப்பு அதிகார சபை வவுனியா மாவட்ட முகாமையாளர் விபத்தில் சிக்கி மரணம் அடைந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ஜீப் வண்டி வரக்காபொல அருகே கடந்த வியாழன் நண்பகல் விபத்தில் சிக்கியதில் இவர் மரணமடைந்ததாகவும் மேலும் இரு அதிகாரிகள் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

# இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் சோதனை

இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளை பரிசோதிக்கும் திட்டம் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வகையில் கடந்த மாசி மாதத்தில் மட்டும் 335 கால்நடைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இத்திட்டத்தினால் நோய்வாய்ப்பட்டவை, இனப்பெருக்கத்திற்கு உகந்த நல்லினக் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது தடுக்கப்படுவதுடன் பாவனையாளர்கள் தரமான இறைச்சியையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## விண்ணப்பிக்கவும்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து) தமது முயற்சியால் உவர் நிலமும் வெள்ளமும் தேங்கி நிற்கும் தரைகளில் நெல்உற்பத்தியை ஊக்குவிக்கும் நன்நோக்கமாக உள்ளீடுகளைக் கொழும்பிலிருந்து பெற்று விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்படி சமாசம் மேற்கொண்டு வருகிறது

யாழ், மாவட்டத்தில் உள்ள 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் அங்கத்துவ சங்கங்களைத் தமக்குத் தேவையான உள்ளீடுகளைப் பெறக்கூடியமுறையில் நேரில் விண்ணப்பிக்குமாறு சமாசத் தலைவர் திரு ச. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (24)

## பிற்போடப்பட்டது

யாழ் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் தமிழ்ப்பிரவேச பண்டிதர் பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி 1994-03-31-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது

க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு ஏற்ற விதத்தில் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கமையப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியெய்தும் மாணவர்களுக்கு கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது


நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய

## மணவாளக் கோலத்திருவிழா

(கும்பாபிஷேக தினம்)

27-03-1994 ஞாயிற்றுக்கிழமை
காலை 7-00 மணி ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு

1008 சங்காபிஷேகமும்
ஐந்து பரிவார மூர்த்திகளுக்கும்

ஸ்நபன அபிஷேகமும்
இடம்பெறும்

ஆனந்தக்காவடி: காலை 6 30 மணியளவில் ஆனந்த ஆட்டக் காவடி நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.
காலை நிகழ்வில் மேளக்கச்சேரி வழங்குவோர்:

S ஜெகநாதன் குழுவினர்
ஜீவரட்ணம் குழுவினர்

மாலை 5-00 மணிக்கு - விசேட நாதஸ்வரக்கச்சேரி

V.K. கானமூர்த்தி V.K. பஞ்சமூர்த்தி
சகோதரர்கள்

மாலை 6 30 மணிக்கு - விசேஷ பூசையும் புந்தண்டிகையில் சுவாமி திருவீதியுலாவும் நடைபெறும்.

அனைவரையும் இவ்விழாவில் கலந்து முருகப் பெரு



வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க

# புடவை நிலையத் திறப்பு விழா

வடமராட்சி கிழக்கு மக்களுக்கோர்
மகத்தான சேவை

V

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் வளர்ச்சியில்
ஓர் படிக்கல்

# "திரௌபதா"

## புடவை நிலையத் திறப்பு விழா

**காலம்:- 27-03-94 ஞாயிற்றுக்கிழமை ந. பகல் 12-00மணி**
**இடம்:- நாகர்கோவில் வடக்கு**

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்.
மருதங்கேணி.

(7847)

---


மாலை 6 30 மணிக்கு - விசேஷ பூசையும் பூந்தண்டிகையில் சுவாமி திரு வீதியுலாவும் நடைபெறும்:

அனைவரையும் இவ்விழாவில் கலந்து முருகப் பெருமான் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(7877) - ஆலய பரிபாலன சபை

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லையா சந்திரசேகரம்**
(இ. போ. ச. நடத்துனர்)

தோற்றம் 30-06-1945 | மறைவு 30-03-1991

**திதி: 27-03-94**

பாசமுடன் பரிந்து பாரில் பக்குவமாய் வளர்த்தாய்
அப்பா
நேசமுடன் நிழலாய் நின்றாய் நீயகன்ற நெடுந்துயர்
நீங்கோம்
மாசடைந்த மணியாய் மண்ணில் அயர்வடைந்தோ
மாயினும் - உன்றன்
ஆசிலுயிரீசன் தாளை அடையவென்றேத்துமியாமே

அன்புத் தெய்வமே நின்பிரிவால் வாடும்
தாய், மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மைத்துனிகள், மைத்துனர்கள், மருமக்கள்,
பேரமக்கள்.

பத்தமேனி,
அச்சுவேலி.

(7743)

### சிந்தனைக்கு

மக்களின் நியாயமான மறு சிந்தனை பொதுவாக தவறாய் இருப்பதில்லை.

- மார்ட்டின் வேன் ப்யூரன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-03-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# தென் மாகாண மக்கள் வழங்கிய சந்தர்ப்பம்

தென் மாகாண சபைத் தேர்தலில் தாம் அளித்த தீர்ப்பின் மூலம் சிங்கள மக்கள் அரசியல்வாதிகளுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளார்கள். அரசியல்வாதிகள் இனவாதப்போக்கை நிராகரித்ததுடன் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான ரீதியிலான தீர்வைக் காண்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர்.

இனப்பிரச்சினை இத்துணை விசுவரூபம் எடுத்து இரத்த ஆறு ஓடுவதற்கு கடந்த காலத்தில் சிங்கள மக்கள் எத்தகைய பங்காற்றினார்கள். இதனை அவர்கள் தாமாகவே மேற்கொண்டனரா? அல்லது அரசியல்வாதிகள் ஊட்டிய இனவெறியில் சிக்கியதனால் ஏற்பட்டனவா? இதில், எதுவாக இருப்பினும் இன்று அந்நிலை மாறியுள்ளது, சிங்கள மக்கள் சமாதானத்தை உருவாக்குவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளனர்.

சிலவேளை, தென் மாகாண மக்களின் முடிவு சிங்களவரின் முடிவல்ல எனச் சிலர் வாதிக்க முற்படுவார்களானால் அவர்கள் சிங்கள மக்களுக்குத் துரோகம் இழைத்தவர்களேயாவார்கள். ஏனெனில் சிறிலங்காவில் ஏனைய மாகாணங்கள் யாவற்றையும்விட பௌத்த-சிங்களவரை அதிகம்கொண்ட மாகாணம் தென்மாகாணமே ஆகும். இங்குள்ள மக்களில் 80 வீதத்திற்கும் அதிகமானோர் பௌத்த - சிங்களவராவர் இந்நிலையில் தென் மாகாண மக்கள் வழங்கிய முடிவை சிங்கள மக்களின் முடிவு என்பதில் தவறில்லை.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாண ஒரு சந்தர்ப்பம் வழங்குங்கள் என்ற ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் கோரிக்கையைத் தென் மாகாண மக்கள் நிராகரித்ததின் மூலம்சமாதானத்திற்கான இச்சந்தர்ப்பம் இன்று வழங்கப்பட்டுள்ளது. மக்கள் அளித்த இத்தீர்ப்பிற்கு சிறிசேனகுரே கூறுவதுபோல் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலை வணங்குகின்றார் என்றால் இனப்பிரச்சினைக்கு அவர்ஓர் அரசியற்தீர்வை சமாதான ரீதியில் காண முற்படவேண்டும்.

அதாவது இராணுவத்தீர்வு என்பது சிங்களமக்களால்

அட்டகாசம் புரிந்து அழிக்கும் கும்பலிடம்

# அரசியலமைப்பின் சரத்தை காட்டி நீதியைக் கோர முடியுமா?

**- கலாநிதி நீலன் திருச்செல்வம் கேள்வி**

(கொழும்பு)

1983 யூலையில் உயிர்களையும், உடைமைகளையும் அழித்தும் எரித்தும் அட்டகாசம் செய்த கும்பலிடம் அரசியல் அமைப்பில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கும் அத்தியாயத்தைக் காட்டி அமைதிகாக்கும்படி கேட்டிருக்க முடியுமா?

இவ்வாறு இனத்துவ கல்விக்கான சர்வதேச நிலையப் பணிப்பாளர் கலாநிதி நீலன் திருச்செல்வம் கேள்வி எழுப்பினார்.

அரசியல் சீர்திருத்தமும், தேசிய ஒற்றுமையும் என்ற தலையங்கத்தில் கொழும்பு லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்த கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் அரசியல் சீர்திருத்தம்பற்றி நாம் பேசும்போது இலங்கை முகம் கொடுக்கும் அரசியலின் உண்மைநிலையைக் கருத்தில் கொள்ள வேண்டும், பாராளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களில் 11 ஆசனங்கள் இன்னமும் நிரப்பப்படாமல் உள்ளன வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரது அந்த ஆசனங்கள் அடுத்த தேர்தல் வரை நிரப்பப்படவும் மாட்டாது' இதுவே இன்றைய அரசியல் யதார்த்தம். எனவே மக்களது கசப்புணர்வை வெற்றி கொள்ள நாம் எவ்வகையான அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வரலாம்?

அரசியல் சீர்திருத்தம் பற்றி முரண்பாடான எதிர்பார்ப்புகள் நிலவுகின்றன. ஒரு பக்கத்தில் அரசியல் யாப்பு வெற்றிகரமாக செயற்படும் என்றும் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய பல்வேறுகட்சிகளை கொண்ட ஜனநாயக பண்பினை உருவாக்கக் கூடிய சக்தி வாய்ந்தது என்றும் இது எதிர்பார்க்கப்படுகின்றது. மறுபக்கத்தில் அரசியலமைப்பின் பயனற்ற கோட்பாடுகள்பெரும் ஏமாற்றத்தை அளிக்கின்றன. அரசியல் அமைப்புகளின் சிறந்த நிலைக்கும் அவற்றின் அரசியல் ரீதியானதும்தொகுதிவாரியானதுமான துஷ்பிரயோகங்களும்உண்மைகள் மறுக்கப்படும் யதார்த்த நிலைக்கும் இடையே பெரும் பிளவு காணப்படுகின்றது பல்வேறு இனங்களைக் கொண்ட சமுதாயத்திற்கு அத்திவாரமாக அமையக் கூடிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்க அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள்தவறிவிட்டன.

சோல்பரி அரசியல் அமைப்புடன் சம்பந்தப்பட்ட போராட்டங்களின் போது அக்கால அரசியல் தலைவர்கள் ஒரு சமஷ்டி ஆட்சிமுறையையும், அடிப்படை உரிமைகளையும் வற்புறுத்தியிருந்தால் தோட்டத் தொழிலாளரது வாக்குரிமை பறிக்கப்பட்டதையும், 1956இல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதையும் தவிர்த்திருக்க முடியும்.

சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகள் அழகான நுட்பமான வார்த்தைகளில் அரசியல் அமைப்புகளில் இடம் பெறலாம். ஆனால் அவ் வார்த்தைகள் சிறுபான்மையினரை ஏற்றுக் கொள்ளாது தாம் நினைத்ததையே சாதிக்கக் கங்கணம் கட்டும் ஒரு பெரும்பான்மையினரிடமிருந்து சிறுபான்மையினரை பாதுகாக்க உதவும் என்பது சந்தேகத்துக்கு இடமாகும் எனச் சிலர் நினைக்கின்றனர். 1983 ஜூலை மாதத்தில் உயிர்களையும்உடைமைகளையும் எரித்தும் அழித்தும் அட்டகாசம் செய்த வன்முறைக் கும்பலிடமோ அல்லது அயோத்தியில் மசூதியை மோசமாகத் தாக்கிய சர்சேவா கும்பலிடமோ, அரசியல் அமைப்பில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிக்கும் அத்தியாயத்தைக் காட்டி அமைதி காக்கும்படி கேட்கமுடியுமா?

நீதித்துறையினரும், சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பதில் ஆர்வம் அற்றவர்களாக இருப்பின் சிறுபான்மையினரின் உரிமைகளை அரசியல் அமைப்பு மூலம் பாதுகாப்பது என்பது அர்த்தமற்றதாகிவிடும் எனத் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் உரையாற்றுகையில், அரசியல் சீர்திருத்தத்தால் சமூகங்களிடையே ஒற்றுமை ஏற்பட்ட நாடுகளும் உண்டு. ஒற்றுமை ஏற்படாத நாடுகளும்உண்டு: மொரீசியஸின் இனப்பிரச்சினை அரசியல்சீர்திருத்தத்தால் தீர்க்கப்பட்டது. ஆனால் பிஜி, தென்னாபிரிக்கா, சைப்பிரஸ் போன்ற நாடுகளில் அரசியல் சீர்திருத்தம் பெரும் பயன் அளிக்கவில்லை இலங்கையில் சிறுபான்மையோர் தீர்மானம் எடுப்பதிலிருந்து விலக்கப்படுவது இனவாத உணர்வலைகள் தோன்றுவதற்கு காரணமாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் திருமதி ஜெஸீமா இஸ்மாயில், திரு சிவசிதம்பரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# சுதந்திர தமிழீழத்திற்காகவே போராளிகள் வீரச்சாவடைந்தனர்

**- பொன்தியாகம்**

(தொல்புரம்)

சுதந்திரதமிழீழத்தைவென்றெடுப்பதற்காக இந்த மாவீரர்கள் தமது உயிரினை துச்சமென மதித்து போராடி வீரச்சாவைதழுவிக்கொண்டவர்கள். அந்த புனித லட்சி

ந. மதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் அவர்கள் தெரிவித்

டும்- ஆயின் நீங்களும் அவர்களின் போராட்ட வழியில் வர முன்வரவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்நிகழ்வின்போது யாழ்மாவட்ட அரசியல்துறை உதவிப் பொறுப்பாளர் திரு

# மண்டேலா கார் மீது கல்வீச்சு நடந்தது

(மனன்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நடைபெற இருக்கும் தேர்தல்களிற்கான பிரசார வேலைகளில் ஈடுபட்டுவிட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா பயணம் செய்த கார் கல்வீச்சுக்கு இலக்கானது. ஆளும் ஆபிரிக்க தேசிய கட்சியின் ஆதரவாளர்களே இக் கல்வீச்சை நடத்தியதாகக் கூறப்படுகின்றது. ஆயுதம் தாங்கிய காவலர்களின் பாதுகாப்போடு பயணம் செய்த நெல்சன் மண்டேலா இக் கல்வீச்சு சம்பவத்தில் காயமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் தொடர்பான பதற்றம் மற்றும் கலவரங்கள் என்பவற்றில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சூலு, இன்காதா கட்சி என்பவற்றின் ஆதரவாளர்கள் ஈடுபட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை கல்வீச்சு சம்பவம் இடம் பெற்ற பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பு இன அதிபராக வரக்கூடும் என எதிர்பார்க்கப்படும் நெல்சன் மண்டேலா தமது உரையில் இத்தகையசம்பவங்களால்உணர்ச்சி வசப்பட்டு தமது ஆதரவாளர்கள் எதிர் விளைவைக் காட்டும் சம்பவங்கள் எதிலும் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும் இச் சம்பவம் பற்றி நெல்சன் மண்டேலாவின் கார்ச்சாரதி செய்தியாளர்களிடம் விபரிக்கையில் காரை ஒரு சில கற்கள் தாக்கின என்றாலும் ஏராளமானவர்கள் காரைச் சூழ்ந்து கொண்டு சத்தமிட்டதாகவும், அதில் ஒரு வெள்ளைப் பெண்மணிதான் வெள்ளையரையே ஆதரிப்பேன் எனக் கோஷம் எழுப்பியதாகவும் தெரிவித்தார்.

# இரு புதிய ஏவாயுதங்கள் கொரியா தயாரிப்பு

(வாஷிங்டன்)

வடகொரியா இரு புதிய அணுசக்தி ஏவாயுதங்களை செய்து வருவதாகவும் முழு தென்கிழக்காசியாவையும் பசிபிக்கையும் அபாயத்திற்கு உட்படுத்தும் நிலையில் அவை இருப்பதாகவும் சி. ஐ.ஏ. கூறியுள்ளது.

சென்ற ஆண்டு 620 மைல் தூரம் செல்லக்கூடிய ஏவாயுதங்களை உற்பத்திசெய்த வடகொரியா இப்போது அதைவிட அதிக தூரத்தை எட்டும் இருமேலதிக ஏவாயுதங்களைச் செய்து வருவதை தங்களால் ஊர்ஜிதம் செய்ய முடியும் என சி. ஐ. ஏ இயக்குநர் உல்ஸ்லி குறிப்பிட்டார்

வடகொரியாவின் அணு ஆயுதங்கள் மத்தியகிழக்கிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் ஐரோப்பாவையும் அச்சுறுத்தும் நிலையில் இருக்கும்; 1240 மைல் தூரமும் 2175 மைல் தூரமும் செல்லக் கூடிய இரு புதிய ஏவாயுதங்களை வடகொரியா செய்து வருவதாக ஜேன்ஸ் பாதுகாப்பு வார சஞ்சிகை குறிப்பிட்டது.

இதேவேளை வடகொரியாவை ஒரே நாளில் அடையும் வகையில் அமெரிக்கா 30 போர்க்கப்பல்களைவைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றில் இரு விமானந்தாங்கிக் கப்பல்களும் தாக்குதல் படை ஒன்றும் அடங்கியுள்ளன.

# வடகொரியா மீது பொருளாதாரத் தடை

**அமெரிக்கா யோசனை**

(வாஷிங்டன்)

வடகொரியாமீதுபொருளாதாரத் தடையை கொண்டு வரும்படி ஐ. நாவை கோர அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. இத் தகவலை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் அறிவித்தார்.

வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் பெரும் முயற்சிகள் எடுத்து வருகின்றன.

வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தி மையங்களைப் பார்வையிட சர்வதேசக் குழுவினரை வடகொரியா அனுமதித்திருந்தது. ஆனால் மேற்படி குழுவினர் தாம் பார்வையிட்டமை சம்பந்தமாக திருப்தி தெரிவிக்கவில்லை.

இது பற்றி வடகொரியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் தோல்வியடைந்தமையை அடுத்து அமெரிக்கா மேற்படி முடிவை அறிவித்துள்ளது

விஜேதுங்கா தலை வணங்குகின்றார் என்றால் இனப் பிரச்சினைக்கு அவர்ஓர் அரசியற்தீர்வை சமாதான ரீதியிற் காண முற்படவேண்டும்;

அதாவது இராணுவத்தீர்வு என்பது சிங்களமக்களால் நிராகரிக்கப்பட்டதொன்றாகிவிட்டது. சிறிலங்கா இராணுவத்தில் அதிகளவு சிப்பாய்களைக் கொண்ட தென் மாகாணத்திலேயே இராணுவத் தீர்வு நிராகரிக்கப்பட்டமையானது இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுற்பட்டு இரத்தம் சிந்த அவர்கள் தயாராக இல்லை என்பதைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். அதாவது அரசாங்கம் எதைக் கூறினும் இராணுவத்தீர்வு வெற்றியளிக்கப் போவதில்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டு விட்டனர் என்றும் கொள்ளலாம்.

ஆனால், இச்சந்தர்ப்பம் தனியாக ஆளும் கட்சிக்கும், அதன் தலைவர் டி. பி. விஜேதுங்காவிற்கு மட்டும் வழங்கப்பட்டதல்ல; தற்பொழுது எதிர்க்கட்சியான சிறிலங்காசுதந்திரக்கட்சிக்கும் அதன்தலைமைக்கும்சேர்த்தே வழங்கப்பட்டதாகும். இதனைச்சிறிலங்காசுதந்திரக்கட்சியின் எதிர்காலத் தலைவி எனக் கணிக்கப்படும் சந்திரிகா குமாரணதுங்கா விளங்கிக்கொண்டிருப்பது போலுமுள்ளது; ''இனவாதத்திற்கு தென்பகுதி மக்கள் மட்டுமன்றி முழு நாட்டு மக்களுமே இரையாகவில்லை'' என்பதையே இத்தேர்தல் காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இனியும் இனப்பிரச்சினை தீர்விற்குச் சிங்கள மக்களின்மீது பழியைப் போடுவதை சிங்கள அரசியல்வாதிகள் நிறுத்திக்கொள்ளவேண்டும், கடந்த காலத்திலும் சிங்கள மக்கள் இனவெறிகொண்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் நிரந்தரமாகவே இனவெறி கொண்டவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால், தமிழ் மக்கள் காலத்திற்குக் காலம் தாக்கப்பட்டிருக்கமாட்டார்கள். தொடர்ச்சியாகவே தாக்கப்பட்டுக்கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் காலத்திற்குக் காலமே அவர்கள் இனவெறி வெளிப்பட்டமையானது அவர்கள் தூண்டப்பட்டார்கள் என்பதற்குப் போதிய சான்றாகும்,

ஆனால் இம்முறை இனவாதத் தூண்டுதல் சிங்கள மக்களிடம் பலன் தரவில்லை. சிறிலங்காவின் கடந்த கால அரசியல் வரலாற்றை மாற்றி அமைத்துள்ளனர், அவர்கள் இனவாதத்தினால் விளைந்த கேடுகளைப் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள். இந்நிலையில் சிங்கள அரசியற்கட்சிகளும் இதனைப் புரிந்து கொண்டு கடந்த காலம் இனவாதப் போக்கைக் கைவிட்டு இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுகாண முன்வரவேண்டும். அவ்வாறு அவர்கள் செய்ய முன்வராதுவிட்டால் அது சிங்கள மக்களுக்கு அவர்கள் இழைத்த வரலாற்றுத் துரோகமாகவே இருக்கும்.

---

றெடுப்பதற்காக இந்த மாவீரர்கள் தமது உயிரினை துச்சமென மதித்து போராடி வீரச்சாவைதழுவிக்கொண்டவர்கள். அந்த புனித லட்சியத்தை அடையவே தங்கள் அபிலாசைகளைமறந்து தமது உற்றார்களை மறந்து எமது மண்ணைநேசித்தார்கள் தாங்கள் சுமந்த அந்த புனித லட்சியத்தை தமக்கு பின்னால் வருபவர்களும் சுமந்து வருவார்கள் என்ற நம்பிக்கையுடனே இவ் அரும்பெரும் பொறுப்பை எம்மிடம்விட்டுச் சென்றுள்ளனர்

இவ்வாறு கடந்த சனிக்கிழமை இரவு மூளாய் மேஜர் பிரசாத் கலையரங்கில் சங்கானை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் அவர்கள் தெரிவித்தார்-

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த மாவீரர்களின் இலட்சியப்பற்றை அனைவரும் செவிசாய்க்க வேண்டும்- இவர்களது இலட்சியக் கனவுகளைநிறைவேற்ற முன்வரவேண்டும் எனகாலம் கட்டளையிட்டு சுமத்தியிருக்கிறது- அவர்கள் செய்த தியாகம் மிக ஆழமானது- அவர்களது எதிர்பார்ப்புக்கள் லட்சிய நினைவுகள் நனவாக வேண்டும்- இதே போன்றுநம் எல்லோர்க்கும் முழுமையான மனநிம்மதி கிடைக்க வேண் வர முன்வரவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்நிகழ்வின்போது யாழ்மாவட்ட அரசியல்துறை உதவிப் பொறுப்பாளர் திரு இளையவன், நல்லூர் வட்ட அரசியல்துறைமகளிர்பொறுப்பாளர் செல்வி மொழி, யாழ் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. எழிலன் உட்பட மற்றும் பல தமிழீழ விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி நிகழ்வினை சிறப்பித்தனர்- பெருந்திரளானமக்கள்கலந்து கொண்ட மேற்படி வைபவத்தில்மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன- (41)

---

# பாலஸ்தீன-இஸ்ரேலிய பேச்சு மீண்டும் ஆரம்பிக்கும் சூழல் உண்டு

(ரியூனிஸ்)

பாலஸ்தீனிய - இஸ்ரேல் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் சூழல் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது; இஸ்ரேலிய அரசின் தூதுக்குழுவொன்று ரியூனிஸ் சென்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைமையுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியிருப்பதைத் தொடர்ந்து இச் சூழல் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மத்திய கிழக்கில் அமைதியை நிலைநாட்டும் முகமாக பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும், இஸ்ரேலுக்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள்ஏப்ரோன் மசூதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை தொடர்ந்து முறிவடைந்தமை தெரிந்ததே

ஏப்ரோன் பள்ளிவாசல் பகுதியில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் நிலை கொள்வதை இஸ்ரேல் ஆதரிக்க முன்வந்ததும், இஸ்ரேல் மீது வெளிநாடுகள் குறிப்பாக அமெரிக்கா பிரயோகிக்கும் பெருத்த அழுத்தமுமே பேச்சு வார்த்தைகள் மீளத் தொடங்கும் சூழலை உருவாக்கி வருவதாகத் தெரிகின்றது.

ஏப்ரோன் படுகொலைச் சம்பவத்தை தொடர்ந்துபாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தினதும் செல்வாக்கு பலத்த பாதிப்புக்கு உட்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

இதேவேளை ஏப்ரோன் படுகொலைச் சம்பவம் தொடர்பாது ஐ. நா நிறைவேற்றிய தீர்மானத்தை முழு அளவில் ஏற்க இஸ்ரேல் மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது;

## மத்திய கிழக்கு முன்னணியில்

(நியுயோர்க்)

செய்தியாளர்களை அவர்கள் வெளியிடும் செய்திகளுக்காக சிறைவைப்பதில் மத்திய கிழக்கு இதர பிராந்தியங்களை விட முன்னணியில் இருக்கின்றது சீனாவும் குவைத்தும் நிருபர்களை சிறைவைப்பதில் முதலிடம் வகிப்பதாக பத்திரிகையாளர் அவதானிகள் குழு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

வீட்டினைச் சுற்றி தோட்டம் தழைக்க
நாட்டினில் எங்கும் பசுமையே செழிக்கும்

---

ஆயுத உற்பத்தியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் பெரும் முயற்சிகள் எடுத்து வருகின்றன. இது பற்றி வடகொரியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் நோக்கியடைந்தமையை அடுத்து அமெரிக்கா மேற்படி முடிவை அறிவித்துள்ளது

# பாக்- உதவி தூதுவரகம் பம்பாயில் மூடப்பட்டது

(இஸ்லாமாபாத்)

பம்பாயில் இருந்த பாகிஸ்தானிய அரசின் உதவித் தூதுவராலயம் மூடப்பட்டுவிட்டது. இந்த அலுவலகம் இயங்குவதற்கு இந்திய அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பு போதிய அளவில் கிடைக்கவில்லையென்று இஸ்லாமாபாத் குற்றம் சாட்டியுள்ளது

இந்தியாவிலுள்ள இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்த இந்த உதவித் தூதுவரகம் மூடப்படும் தீர்மானம் இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய தூதுவர் எஸ்.கே.லம்பாவிடம் தெரிவிககப்பட்டது:

இந்திய அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையும், எதிர்மறையான போக்குமே இத் தூதுவரகம் மூடப்படுவதற்கு காரணம் எனத் தெரிவித்துள்ள இஸ்லாமாபாத்உதவித் தூதுவரகத்திற்கான கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குவதென்ற வாக்குறுதியிலிருந்து இந்திய அதிகாரிகள் பின் வாங்கிவிட்டதாகவும், பம்பாய் நகரம் அமைந்துள்ள மகாராஷ்டிரா மாநில அரசின் அதிகாரிகள் செயற்படும் முறைமையால் தூதுவரகம் செயற்படுவது கடினமாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது:

அ.தி.மு.க - தி.மு.க தவிர்ந்த

# மூன்றாவது கட்சியுடன் காங்கிரஸ் கூட்டமைக்கும்

(சென்னை)

மயிலாப்பூர், பெருந்துறை சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் அல்லாத மூன்றாவது புதிய அணி ஒன்றை இந்திரா காங்கிரஸ் கட்சி அமைக்கும் என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி திரு. ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நாகர் கோவிலில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்விரு தொகுதிகளின் துணைத் தேர்தல்களுக்கான இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கானகூட்டம் விரைவில் நடத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

தி.மு கவுடனோ அ தி மு கவுடனோ வருங்காலத்தில் தேர்தல் உடன்பாடு எதுவும் வைத்துக் கொள்ளாது என்றும் அவர் தெரிவித்தார்

---

நோயாளரை தொடர்ந்து மூடப்பட்டுள்ளது. இதனை மக்களின் பாவனைக்கு திறந்து விடுவதில் யாழ், போதனா வைத்தியசாலை நிர்வாகமும், நொட்டறிக் கழகமும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை;

நோயாளரை பார்வையிட வருபவர்கள் நோயாளியான பின்னர் கூட இந்த நிலை மாறுமா என்று நிர்வாகத்திடம் பொதுமக்கள் கேள்வி கேட்கின்றார்கள், (நி) (ஈ)

# புற்று நோயாளர்களின் தொகை யாழ். குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் புற்று நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், கண்டு பிடிக்கப்படும் புற்று நோயாளர்நோய் முற்றிப்பழுத்த நிலையில் சிகிச்சைபெற வருவதினால் இதில் அனேகர் மரணம் அடைவதாக வட மாகாண புற்றுநோய் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

1993ம் ஆண்டு ஓராயிரத்து ஐந்நூற்றி அறுபத்திரண்டு புற்று நோயாளர் சிகிச்சை பெற்று வருவதாகவும் இதில் மூன்றில் இரண்டு பகுதியினர் நோய் முற்றிப்பழுத்த நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந் நோயாளருக்கு மேலதிக சிகிச்சை அளிப்பதற்கான போக்குவரத்து வசதிகளை யாழ். போதனா வைத்திய சாலை கிரமமான முறையில் வழங்காமையினால் இந் நோயாளர்களை உடனடியாக கொழும்பு சிகிச்சைக்கு அனுப்ப முடியாமல் இருப்பதாக மேற்படி சங்கத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

1991ம் ஆண்டு ஐந்நூற்று எண்பத்து ஐந்து புற்றுநோயாளர் கண்டு பிடிக்கப்பட்ட போதும் 1993-ம் ஆண்டு அத் தொகை கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்ததாகவும் இதற்கு மக்கள் இந்த நோய் தொடர்பாக பூரண அறிவை பெற்றுக் கொள்ளாமை காரணமென தெரிவிக்கப்பட்டது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களில் எண்பது சதவிகிதத்தினர் சூழல், உணவு மாற்றத்தினாலும் ஏற்பட்டதாகவும் ஏழு வீதமான புற்று நோய் பாலியல் தொடர்பினால் கருப்பையில் ஏற்பட்டுள்ளமை அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக வட மாகாண புற்றுநோயாளர் சங்கத்தினர் வெளியிட்ட தகவலில் மேலும் தெரிவித்தனர்.

இதே வேளை கொழும்பு மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் வருடந்தம் ஐயாயிரம் பேருக்குபுற்றுநோய் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் இதில் ஐந்தில் ஒரு பகுதியினர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவ் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளன.

(நி)

## முல்லைத்தீவில் கரைவலைதிட்டம்

கடந்த வருடம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கடல்வள அபிவிருத்திப் பகுதியினால் மீன் உற்பத்தியைப் பெருக்கவும் வேலை வாய்ப்பை வழங்கவும் முல்லைத் தீவு மாவட்டத்தில் கரைவலை மீன்பிடித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. எனினும் கடந்த சில மாதங்களாக வீசிய வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் தடைப்பட்டிருந்த இத் திட்டம் கடந்த மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் தென் தமிழீழத்திலிருந்து இடம் பெயர்ந்த 25க்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மேலும் பிடிக்கப்படும் மீன் உடனுக்குடன் விற்பனை செய்யப்படுவதுடன், மேலதிகமான மீன் பதனிடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது

## நிதி ஒதுக்கீட்டில் அரசு பாரபட்சம்

### - முன்னாள் மட்டு. அரச அதிபர்

கடந்த காலங்களில் அரச நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டியுள்ளது என தற்போது பொதுநிர்வாக அமைச்சிற்கு இடம்மாற்றப்பட்டுள்ள முன்னாள் மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி தெரிவித்துள்ளார்.

அழிவுகளையே காணாத பகுதிகளுக்கு கூடுதல் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பெரும் அழிவுகளைச் சந்தித்த பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

சூறாவளியால் மட்டக்களப்பு பெரும் பாதிப்பிற்குள்ளானது. இயற்கை அழிவுகளுக்கும் வன்செயல் அழிவுக்கும் மக்கள் முகம் கொடுத்துவிட்டனர் இப்பகுதி மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் கொஞ்சமல்ல; இங்கு அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்பட்டது எனவும் முன்னாள் மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி கூறினார்;

## வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு அதிகாரத்தில் ஆளுநர் மாற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு தற்போது மாகாணக் கல்வி அமைச்சாக மட்டும் செயற்பட்டு வருகின்றது. அதன் வசமிருந்த கலாசாரம், விளையாட்டு ஆகிய துறை சார்ந்த விடயங்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளன;

கலாசாரம், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோவின் நேரடிப் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது; மாகாணப் புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். யோகநாதனின் பொறுப்பில் விளையாட்டுத்துறை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது;

## கறுக்காய் தீவை நோக்கி கடும் எறிகணை வீச்சு

### - இரவு நேர ஹெலித்தாக்கு

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று இரவு 7 மணியளவில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கலிபர் தாக்குதலை நடாத்தியது

இதேவேளை நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து கறுக்காய்தீவை நோக்கி கடும் எறிகணைத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இதில் 10ற்கும் மேற்பட்ட எறிகணைகள் காடு, கடல்கரையை அண்டி விழுந்து வெடித்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை, (86)

## கலைநிகழ்வு ஒத்திவைப்பு

ஸ்ரீ புத்தூர் சோமஸ்கந்தாவில் இன்று இரவு 7 00 மணிக்கு இடம்பெற இருந்த இன்னிசை கானங்களும், கலைநிகழ்வும் பிற்போடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

## மெய்வல்லுநர் போட்டி

(தொல்புரம்)

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வித்தியாலய மைதானத்தில் அதிபர் கே. சிவராசா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (41)

## விளையாட்டு விழா

(வடமராட்சி)

கரவெட்டிபிரதேச செலகத்தின் கீழ் உள்ள கழகங்களுக்கான விளையாட்டு விழா நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கரவெட்டி பிரதேச செயலாளர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது:

பிரதம விருந்தினராக பருத்தித்துறைமாவட்டவைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை கலந்து கொள்வி...

## இரவுநேர ஹெலி தாக்கு; எறிகணை வீச்சு

வலிகாமத்தில் வசாவிளான், குரும்பசிட்டி பகுதிக் குடியிருப்புகள் மீது நள்ளிரவு வேளையில் உலங்குவானூர்தி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டவாறு தொடர்ச்சியாக சில மணி நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 12-00 மணியளவில் இப்பகுதிகளுக்கு வந்த மேற்படி உலங்குவானூர்தி இத்தாக்குதலை நடத்தியது,

இப்பகுதிகளை உலங்குவானூர்தி தாக்கிவிட்டு வலலாய், தொண்டமனாறு பகுதிகள் மீது பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது இப்பகுதிகள் மீது இவ்விமானம் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டிருந்த போது வலலாய், தொண்டமனாறு பகுதிகள் மீது நள்ளிரவில் பல ஆட்லறி ஷெல்கள் வந்து விழுந்து வெடித்தன பலாலி இராணுவ முகாமிலிருந்தே ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. (யோ)

## மூளாய், பொன்னாலைமீது எறிகணைத் தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகர் ஊரிமுனங்கு, வலந்தலை காவல் நிலையிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்று முன்தினம் காலை 7 50 மணியளவில் மூளாய், பொன்னாலை, சுழிபுரம் பகுதி மக்கள் குடியிருப்...

தாக்குதலை மேற்கொண்டதில் பலவீடுகள் சேதமடைந்ததுடன், வயோதிபர் ஒருவரும் காயத்திற்கு உள்ளானார்;

இந்த கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தின் போது சுழிபுரம் மேற்கு ஆலமோலை...

## விமரிசையாக நிகழ்ந்த பிரிவுபசார விழா

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் பிரிவுபசாரவிழா நேற்று மாலை யாழ் பல்கலைக்கழகத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவின் ஆரம்பத்தில் துணைவேந்தர் குடும்பத்தினர் பல்கலைக்கழக பிரதான வாயிலிலிருந்து நாதஸ்வர இசை முழங்க அழைத்துச் செல்லப்பட்டனர். இதே வேளை அன்பர்கள் மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்-

இதனைத் தொடர்ந்து பேராசிரியர் குணரட்ணம் தலைமையில் பிரிவுபசார விழா ஆரம்பமானது இதன் போது மங்கள விளக்கை பேராசிரியர் குணரட்ணம் ஏற்றினார் இதனைத்தொடர்ந்து இருநிமிட மௌனஞ்சலியுடன் வாழ்த்துப்பாக்க...

## அன்னை பூபதி நினைவாக சிரமதானம்

(தொல்புரம்)

அன்னைபூபதி நினைவு நாளையொட்டி யாழ். நாவலர் வீதியில் இயங்கி வரும் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில்சிரமதானப்பணிகள் அண்மையில் நடைபெற்றன. தேசிய சர்வோதய சிரமதான இயக்க ஆதரவுடன் மேற்படி பாடசாலை பழையமாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் கலந்து...

## வைத்திய முன்னிலை பயிற்சி விண்ணப்பங்கள் கோரல்

மருத்துவ கல்வியை முடித்துக்கொண்டு பட்டம்பெற்று வெளியேறிய 439 பட்டதாரிகளுக்கு வைத்தியமுன்னிலைப் பயிற்சியளிக்கப்படவுள்ளது; இதற்கானவிண்ணப்பங்களை சுகாதார மகளிர் விவகார அமைச்சு கோரியுள்ளது;

கொழும்பு, பேராதனை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மருத்துவ பீடங்களிலிருந்து வெளியேறியபட்டதாரி வைத்தியர்களின் பொதுத்தராதர நிரல் ஒன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்டுள்ளது;

இதன்படி வைத்திய பட்டதாரிகள் வைத்திய முன்னிலைப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்களில் யாழ்.வைத்தியபீடபட்டதாரிகள் நேற்று பிற்பகல் 2மணிக்கு கொழும்பு 10இல் உள்ள 231 டீ சேரம் எனுமிடத்திலுள்ள குடும்பநலத்திட்ட கழகத்தின் கேட்போர் கூடத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டிருந்தனர்

விண்ணப்பதாரிகள் இலங்கை வைத்திய சங்கத்தில் தற்காலிகப் பதிவாக பதிவுச்செய்துள்ள சான்றிதழ்களொடு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் எடுத்து வரப்பணிக்கப்பட்டனர்;

## பாம்பு தீண்டி ஒருவர் மரணம்

குடாநாட்டில் நேற்று பரவலாக 5பேர் பாம்புக்கடிக்கு இலக்கானார்கள் இவர்களுள் ஒருவர் பலியானார்-

சுழிபுரத்தைதச்சேர்ந்த பிரபன் (வயது 9) என்பவரே பலியானவராவார் மீசாலையைச் சேர்ந்த குணசிங்கம் (வயது 40), மந்திகையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் (வயது59), சாவகச்சேரியைச் சேர்ந்த பாக்கியநாதன் (வயது52), நீர்வேலியைச்சேர்ந்த பாஸ்கரன் (வயது 28) ஆகியோர் பாம்புக்கடிக்கு இலக்கானவர்களாவர்- (சி. நி)

## பயங்கரவாதமல்ல

இன்று அரசாங்கம் முகம் கொடுத்துள்ள முக்கிய பிரச்சினை வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையே ஆகும், இதனை தென் மாகாணசபை தேர்தல் மேடைகளில் பயங்கரவாத பிரச்சினையென திரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி செய்ததாகவும், இதனை பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தேர்தல் முடிவுகள் மேலும் தெரிவித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்

பொது ஜன ஐக்கிய முன்னணி இப்பிரச்சினை தொடர்பான தீர்வுகள் தொடர்பாக தமிழ் மக்களுடனும் ஏனையோருடனும் தீர்மானிக்கப்படுமென வும் தெரிவித்தார்' இதனை முழுமையாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்,

இவ்வாறான ஒருநிலையில் மட்டுமே யுத்தத்தை நிறுத்த முடியுமே தவிரயுத்தம் செய்து இப்பிரச்சினையோ அன்றி யுத்தத்தையோ நிறுத்த முடியாது என்பதை தான் உறுதியாக தெரிவிக்க விரும்புவதாகவும் கூறினார்,

பிள்ளை கலந்து நார்.

கொள்கி (யோ)

புரம் பகுதி மக்கள் குடியிருப் புக்களை நோக்கி எறிகணைத்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 26-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1445

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

41-7563, 42-1320, 43-5015, 27-4678, 41-9530 41-9989, 26-3938, 41-4129, 26-0649, 41-9995, 43-1062, 27-8959, 27-5045, 27-2056, 42-1494 27-6769, 26-7420, 26-0507.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

27-0805, 24-4238, 28-3528, 42-9326, 43-3526 24-8364, 41-9355, 24-1983, 24-5774, 26-0535 26-1919, 24-1797, 22-7271, 22-8777, 27-1542 26-2414, 26-4792, 41-8155, 26-7068, 26-8051 24-5703, 26-3412, 24-9569.

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

### பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

28-3-1994 திங்கட் கிழமை பிற்பகல் 3.00மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறும்.

நல்லூர் பிரதேசத்தில் உள்ள அனைத்து வர்த்தகர் களையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளு மாறு கேட்டுக் கொள்கிறோம் ஒவ்வொரு வர்த்தகர் களின் வரவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

(கி-8933)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

சுழிபுரம் மேற்கு ஆலமோலை யைச் சேர்ந்த க. கருணாநந் தன், அ. சுப்பிரமணியம், சு. முருகேசு, கு. சின்னத்தம்பி என்பவர்களின் வீட்டு கூரை ஓடுகள், சுவர் போன்றவை சேதப்பட்டன. இதேவேளை அ. சுப்பிரமணியம் (வயது 70) என்பவர் பீரங்கி சிதறல் பட்டதினால் கை விரல் ஒன் றில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

அன்றைய தினம் மேற்படி பகுதிகளில் பரவலாக ஏவப் பட்ட எறிகணைகளினால் மூளாய், பொன்னாலைப் பகுதிகளில் உள்ள பனைமரங் கள், வேப்பமரங்கள் போன்ற பயன்தரு மரங்கள் பலவும் சேதப்பட்டன. இவ்வேளை பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தமது தொழிலை கைவிட்டு கரைதிரும்பியதால் உயிர்ச்சேதங்கள் எதுவுமின்றி தப்பித்துக் கொண்டனர். (41

மாணவர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் கலந்து கொண்டு பாடசாலை சுற் றாடல்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். மேலும் இச் சிறப்புப் பணி யின் போது தேசிய சர்வோ தய வெளிக்கள இயக்குனர் திரு. கே. சுப்பிரமணியம், மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா மற்றும் பல பிரமுகர்கள் பிரசன்னமாயி ருந்தனர் (41)

### ஐ. தே. க

கட்சியில் மிக உச்சகட்டத்தை அடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்-

ஆனால் இன்று அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி க்கு உயர் அதிகாரங்கள் உள் ளமையினால் தனக்கு எதி ராக செயல்படுபவர்களை கட்சியில் இருந்து நீக்குவது மட்டுமல்ல வேறு தண்டனை கள் வழங்கக்கூடும் எனவும் அவர்கள் பயப்படுவதாகவும் எனவே இவ் முடிவை பொறு த்துதான் பார்க்க வேண் டுமென மேலும் தெரிவித் தார்-

### 1992.ம் ஆண்டு

வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவ பீடத் திற்கான வெட்டுப்புள்ளி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை 1993 க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோரில் 180ற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற 28438 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படி வம் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் இவர்களுக் கான வெட்டுப்புள்ளி அடுத்த மாதம் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### பிரதமருக்கு

வழமையாக வருடா வருடம் நடைபெறும் இந்த 'பிச மச்'சில் சம்பந்தப்பட்ட இரு பாடசாலைகளும் அந்தந்தப் பாடசாலைகளுக்கு விசுவாசம் தெரிவிக்கும் வகையில் கொடிகளை ஏற்றியுள்ளனர் என்று ஒரு கனிஷ்ட பொலிஸ் அதிகாரி மேல் அதிகாரிக்கு விளங்கப்படுத்தினார். மற்றும் படி கொடிகள் யாரையும் இம்சிக்கும் நோக்கத்துடன் கட்ட ப்பட வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மைதானத்தைச் சுற்றியுள்ள மரங்கள் மற்றும் பவிலி யனிலும் கொடிகள் தொங்க விடப்பட்டிருந்தன. ஒரு பாட சாலைக் கொடியில் சிவப்பும், நீலமும் கலந்திருந்ததே அதி காரியின் இந்த நடவடிக்கைக்குக் காரணமாம்.

சலியுடன் வாழ்த்துப்பாக்க ளும் வாசிக்கப்பட்டன.

## பதவி ஏற்பு

(வடமராட்சி)

புலோலி பிரதேச சபையின் விசேட ஆணையாளராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு ஆ. சிவ சாமி இவ்வாரம் முதல் பதவி யேற்றுள்ளார். முன்னர் இரு ந்து வந்த விசேட ஆணையா ளர் திரு. எஸ். முருகேசம் பிள்ளை ஓய்வு பெற்றதை யடுத்து இவர் நியமிக்கப்பட் டுள்ளார். (வோ)

### ராணுவ

லாகும் என அவ்வானொலி மேலும் குறிப்பிட்டது.

ஆளும் கட்சியின் தற்போ தைய தோல்வி ஐ. தே. க. அரசு விடுதலைப் புலிகளுடன் இராணுவ ரீதியாக மோது வதை கட்டுப்படுத்தி பேச்சுக் கள் மூலம் புலிகளுடன் ஓர் இணக்கத் தீர்வை ஏற்படுத்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி யுள்ளது. பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் கண்டால் அடுத்த தேர்தல்களில் ஐ. தே. க. விற்கு வெற்றிவாய்ப்புகள் உருவாகலாம். அதே சமயம் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து விட்டால் அது வும் ஐ. தே. கவிற்கு வலு சேர்க்கும் ஆனால் இது அவ் வளவு எளிதல்ல என்று அர சுக்கும் இராணுவத்திற்கும் தெரியும்.

ஜனாதிபதி விஜேதுங்கா தம்மை ஒரு சிங்கள பேரின வாதத் தலைவராக அடை யாளம் காட்டிக் கொண் டது தென் மாகாண சபைத் தேர்தலில் ஆகும். விஜேதுங் காவின் இப்போக்கிற்கு சிங் கள மக்கள் காட்டிய எதிர்ப்பு தேர்தல் முடிவாகியுள்ளது என அறிக்கை மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன் னணி இப்பிரச்சினை தொடர் பாக கொண்டுள்ள கருத்தின் படி, வடக்கு கிழக்கு பிரச் சினை பயங்கரவாதப் பிரச் சினை அல்ல. அங்கும் பெரும் தொகையான மக்கள் வாழ் கின்றார்கள். அவர்களின் இன்றைய நிலைமைக்கு அர சாங்கம் அவர்களுக்கு நியாய பூர்வமானவற்றை வழங் காமையே காரணம் எனத் தெரிவித்தார்.

நாம் பதவிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினை க்கு அரசியல் மூலம் தீர் வொன்றை காண முற்படு வோம். இதற்கான ஓர் தீர்வு திட்டமொன்றை தயாரித்து இதில் உள்ள குறைகள் மற்

யாக தொலைக்க விரும்புவ தாகவும் கூறினார்.

நான் முழுமையாக நம்பு கின்றேன் இந்த அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தப் போவ தில்லை ஏனெனில் இந்த யுத் தம் இன்று ஓர் பாரிய வியா பார நடவடிக்கையாகவே மாறியுள்ளது. அநுரா பண் டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறியமை மிகவும் சக்தியுள்ள ஓர் பொது முன் னணியை தம்மால் அமைக்க கூடியதாக இருந்தது. அநு ராதான் எமது கட்சியை பல வருடமாக பிரித்தார். அவர் இல்லாமை கட்சிக்கு கிடை த்த ஓர் அரிய சந்தர்ப்பம் என்றும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திரு. நாகமணி இரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியர் ஏழாலை தெற்கு)

ஏழாலை தெற்கு விழுசிட்டியைச்சேர்ந்த இளைப் பாறிய ஆசிரியர் நாகமணி இரத்தினம் 26-03-94 சனிக்கிழமை சிவபதமடைந்தார். இவர் தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஞானம், காலஞ் சென்ற இராசம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும் தனபாலரத்தினம், இரஞ்சிதமலர், இராசரத்தினம் (C. D. E. கொழும்பு), நல்லரத்தினம் (பொறியியலா ளர்-கனடா), தருமரத்தினம் (கணக்காளர்-கனடா), தவரத்தினம் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தம் (முன்னாள் A. G. A. மடு, ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் மன்னார்), கலைவாணி (கொழும்பு), சுக நதினி (கனடா), சுஜந்தி (கனடா), சூரியகலா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌரி (உடுவில் மகளிர் கல்லூரி-மாணவி), சிரிஷான் (கொழும்பு), சஞ்சுதா (கனடா), சிந்துஜா (சுவிற் சர்லாந்து) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27-03-94 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பகல் 12 மணிக்கு தகனக் கிரியை க்காக எடுத்து செல்லப்படும்.

தகவல்:

திருமதி இரஞ்சிதமலர் (மகள்)

(7856)